செய்தி வெளியீடு எண்: 12 நாள்: 07.04.2018

***தேனி மாவட்டம்,***
***புதியவடிவிலான சட்ட உதவி மற்றும் அரசுத்துறைகளின் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழிப்புணர்வு முகாம் மாவட்ட முதன்மை நீதிபதி திரு.எஸ்.செந்தில் குமரேசன் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.***

**********

தேனி மாவட்டம், ஆண்டிபட்டியில் (07.04.2018) இன்று மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு இணைந்து நடத்திய புதிய வடிவிலான சட்ட உதவி மற்றும் அரசுத்துறைகளின் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழிப்புணர்வு முகாம் மாவட்ட முதன்மை நீதிபதி திரு.எஸ்.செந்தில் குமரேசன் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

முகாமில் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு வருவாய்த்துறை, கல்வித்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, சமூகநலத்துறை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத்துறை, சைல்டுலைன்1098, தேசிய குழந்தைத்தொழிலாளர் திட்டத்துறை, தொழிலாளர் துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, கூட்டுறவுத்துறை, வனத்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை போன்ற அரசுத்துறைகளின் சார்பில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுவரும் சலுகைகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது, மேலும் பொதுமக்களிடமிருந்து முதியோர் ஓய்வூதியம், விதவை ஓய்வூதியம், மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, ஏழைப்பெண்களுக்கான திருமண நிதியுதவித்தொகை, குழந்தைத்தொழிலாளர்கள் ஓய்வூதியம் போன்ற பல்வேறு கோரிக்கைகள் குறித்து பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்றப்பட்டு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் மூலம் தீர்வுகாண உத்திரவிடப்பட்டது.

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் தலா ரூ.4235 மதிப்பீட்டில் 2பயனாளிகளுக்கு ரூ. 8470 மதிப்பிலான விலையில்லா தேய்ப்பு பெட்டியினையும், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் தலா ரூ.5066 மதிப்பீட்டில் 2 பயனாளிகளுக்கு ரூ.10,132 மதிப்பிலான விலையில்லா தேய்ப்பு பெட்டியினையும், வேளாண்மைத்துறை சார்பில் 1பயனாளிக்கு ரூ.4048 மதிப்பிலான சூரியஒளி பூச்சிதடுப்பு இயந்திரத்தினையும் என மொத்தம் 5 பயனாளிகளுக்கு ரூ.22,650 மதிப்பிலான அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. வருவாய்த்துறையின் சார்பில் 7பயனாளிகளுக்கு மாதாந்திர உதவித்தொகை பெறுவதற்கான ஆணையினையும், 5 பயனாளிகளுக்கு வாரிசு சான்றிதழ்களையும், விலையில்லா வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் 13 பயனாளிகளுக்கு வீட்டுமனைப்பட்டாவிற்கான ஆணையினையும், 2பயனாளிகளுக்கு பட்டாமாறுதலுக்கான ஆணையினையும், 5பயனாளிகளுக்கு ஜாதிச்சான்றிழ்களும் வழங்கப்பட்டது.

இம்முகாமில் பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் திரு.கார்த்திகையன் அவர்கள், கூடுதல் தலைமை நீதிபதி திருமதி.எஸ்.சுமதி அவர்கள், மாவட்ட உரிமையியல் சார்பு நீதிபதி திரு.குமரேசன் அவர்கள், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி.கிருஷ்ணவேணி அவர்கள், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.ரகுபதி அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.சந்திரசேகரன் அவர்கள், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ச.தங்கவேல் அவர்கள், மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி.செ.உமையாள் அவர்கள், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் முனைவர்.சத்தியநாராயணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**